**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, ERANIEL**

**DEPOSITION OF WITNESS**

(Chapter XXIII Code of Criminal Procedure, 1973/Chapter XXV of BNSS 2023, and Rule 42 and Judicial Form No. 53 of Criminal Rules of practice 2019 )

**C.C.No. 69/2019 P.W.1/L.W.1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. மகாவிஷ்ணு | **Calling** | : | |
| **Father's Name** | : | த/பெ. மனோகரன் | **Age** | : | |
| **Village** | : | | | | |
| **Taluk** | : | | | | |

**Solemnly affirmed in accordance with the provisions of Section 4 of Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day 06.05.2025.**

**அரசுத்தரப்பு முதல் விசாரணை :**

**குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் ஆஜர். குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் ஆஜர்**

1. நான் மேற்கண்ட முகவரியில் வசித்து ஆசிரியராக பணிச் செய்து வருகிறேன். குற்றம் சுமத்தப்பட்ட நபர்களை எனக்குத் தெரியும். 11.01.2018 ம் தேதி காலை 08.10 மணி அளவில் நான் எனது வீட்டிலிருந்த போது பக்கத்திலிருந்து கெட்டவார்த்தைகள் கேட்டது. நானும் எனது அம்மா தங்கம் என்பவரும் வெளியில் சென்றுப் பார்த்தோம். அப்போது ராஜன் பாபு என்பவர் வீட்டிலிருந்து பெண்களை எவ்வாறு பாலியல் வன்கொடுமை செய்யலாம் என்று பேசிக்கொண்டிருந்தார். அதற்கு ஆதரவாக மற்றொரு சத்தமும் கேட்டது.

2. நாங்கள் முதலில் சென்றுப் பார்த்த போது ராஜன்பாபு அவரது வீட்டிலிருந்து கிருஷ்ணகுமார் என்பவருடன் மது அருந்திக்கொண்டிருந்தார். அவர்கள் இருவரும் பெண்களை அவதூறாக பேசிக்கொண்டிருந்தார்கள். எனது தாயார் சென்று இது குறித்து அவர்களிடம் கேட்டார். அப்போது ராஜன் பாபு மற்றும் கிருஷ்ணகுமாரும் எனது தாயாரை மிகவும் அவதூறாக பேசினார். அப்போது ராஜன் பாபுவும் கிருஷ்ணகுமாரும் எங்கள் வீட்டின் முன் கேட் அருகே வந்து தென்னம் ஓலை மட்டையை எடுத்து எனது தாயாரை தாக்குவது போல் வந்தார்.

3. நான் சென்றுக்கேட்டபோது நீ ஆசிரியர் என்பதால் இவ்வாறு கேட்கிறாயா என்று கேட்டார்கள். அப்போது ஸ்ரீதரன் மற்றும் பாலகிருஷ்ணன் ஆகியோரும் சம்பவம் குறித்து குற்றம் சுமத்தப்பட்ட நபர்களிடம் கேட்டார்கள். அதற்கு அவர்கள் எங்கள் இடத்தில் அப்படி தான் பேசுவோம், உங்கள் வேலையைப் பாருங்கள் என்று கூறினார்கள். அதன் பிறகு அவர்கள் பிரச்சினை எழுப்பிவிட்டார்கள். நான் பள்ளிக்கு கிளம்பிவிட்டேன்.

4. மாலை 04.30 மணியளவில் எனது நண்பர் ஸ்ரீகுமார் என்பவர் என்னை போண் மூலம் அழைத்தார். அப்போது அவர் 2 ஆட்டோவில் சில நபர்கள் வந்து என் வீட்டின் முன்பு நின்று பிரச்சினை செய்துக்கொண்டிருப்பதாக கூறினார். நான் எனது நண்பரிடம் எனது தாயாருக்கு பாதுகாப்பாக இருக்கும்படி போண் மூலம் கூறினேன். அப்போது கோபு, ரமேஷ் ஆகியோர் சேர்ந்து எனது நண்பர்கள் ராஜன் பாபு, கிருஷ்ணகுமார் ஆகியோர்களிடம் கேள்வி கேட்கிறீர்களா என்று எனது தந்தை மற்றும் தாயாருடனும் பிரச்சினை செய்துள்ளார்கள்.

5. குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் அனைவரும் சேர்ந்து இன்று இரவே உங்கள் வீட்டை பெட்ரோல் ஊற்றி கொளுத்திவிடுவோம் என்று கூறியுள்ளார்கள். நான் மாலை 05.00 மணியளவில் வீட்டிற்கு வந்துவிட்டேன். நான் காவல்நிலையத்தில் சம்வம் சம்மந்தமாக புகார் கொடுக்கலாம் என்று நினைத்துக்கொண்டு எனது தந்தையையும் அழைத்துக்கொண்டு காவல்நிலையம் செல்லாம் என்று நான் இருசக்கர வாகனத்தில் மண்டைக்காட்டிற்கு சென்றேன். அப்போது மணவாளக்குறிச்சி காவல் ஆய்வாளர் ரோந்து பணிச்செய்துக்கொண்டிருந்தார். நான் அவரிடம் கூறியபோது அவர் மணவாளக்குறிச்சி காவல்நிலையம் சென்று புகார்கொடுக்கும்படி கூறினார்.

6. அவரிடம் நான் சம்பவம் சம்மந்தமாக புகார் கொடுத்தேன். அவர் சம்பவம் குறித்து விசாரணை செய்ய வீட்டிற்கு வருவதாக கூறினார். இரவு 07.00 மணியளவில் ஆய்வாளர் வீட்டிற்கு விசாரணை செய்வதற்காக வந்தார். ஆய்வாளர் ராஜன் பாபுவின் வீட்டிற்கு சென்று பார்த்தபோது ராஜன் பாபு வீட்டில் இல்லை. அவர் மது அருந்திவிட்டு போட்டிருந்த பாட்டில்கள் மட்டும் வீட்டில் கிடந்தது. இரவு குற்றம் சுமத்தப்பட்டநபர்கள் வந்தார்கள் என்றால் தன்னை அழைக்கும்படி ஆய்வாளர் கூறினார்.

7. நான் எனது பெற்றோர்கள் மற்றும் எனது தங்கை ஆகியோர்கள் இரவு தூங்கிவிட்டோம். அன்றையதினமே 11.01.2018 ம் தேதி இரவு 11.30 மணியளவில் எனது தங்கை என்னை எழுப்பினார். அவர் வீட்டின்முன்பு தீப்பிடித்து எரிவதாக கூறினார். முன்கதவை திறந்துக்கொண்டு வெளியில் செல்லமுடியாத அளவிற்கு தீ எரிந்துக்கொண்டிருப்பதால் பின் கதவு வழியாக நாங்கள் வெளியில் சென்றுப்பார்த்தோம். எனது இருசக்கர வாகனமான Hero Honda Splender முழுவதும் எரிந்து காணப்பட்டது. எனது Hero Honda வாகனத்தின்எண் TN. 74. U 4603 ஆகும்.

8. நான் தீயை அணைப்பதற்கு முற்படும்போது கிருஷ்ணகுமார் என்பவர் எங்கள் வீட்டின் முன்பு கேட் அருகே வந்து இப்போது பைக் எரிகிறது, இனிமேல் உங்கள் வீட்டில் உள்ள அனைவரும் அடுத்த தடவை எரிவீர்கள் என்று கூறினார். வீட்டின் சைடிலிருந்தும் சத்தம் கேட்டபோது எட்டிப்பார்த்தபோது ராஜன்பாபு, கோபு இவர்களும் அடுத்து உங்கள் வீட்டில் யாரும் உயிருடன் இருக்க மாட்டீர்கள் என்று கூறிக்கொண்டு சென்றுவிட்டார்கள். ரமேஷ் என்பவரும் 200 மீட்டர் தொலைவில் நின்றுக்கொண்டு குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் அனைவரும் சேர்ந்து அங்கிருந்து சென்றுவிட்டார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>குறுக்கு விசாரணை</u> :

குறுக்கு விசாரணை செய்ய வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யாததால் குறுக்கு விசாரணை முடிக்கப்பட்டது.

சாட்சி சொல்லி என்னால் எடுத்துச் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, குற்றம் சுமத்தப்பட்ட நபர்கள் முன்னிலையில் மேற்படி சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
இரணியல்.